Registered No. M. 59

ஸத்யம்வத, தர்மஞ்சர.

தத்வம் எங்குண்டு, தத்வன் அங்குண்டு. (திருமந்திரம்.)

பிரம்மஞானம் ॐ பத்திரிகை

வாலம் II. { 1907-௵ டிசம்பர் ௴ பிலவங்க௵ மார்கழி ௴ } நம்பர். 6.

Printed at the "SRI VIDYA VINODINI PRESS," Tanjore
Edited and Published by A. Ramier at Tiruvalur.

Copy-Right Registered.

வருடசந்தாமிகவும் சொற்பம்! தபாற்கூலியுள்பட ரூ 1-8 தான்.

The Siddanta Deepika or the Light of **Truth, Madras.**

The only magazine devoted to the study "Siva Siddanta Philosophy

Annual subscription Rs. 4. The journal has a very wide circulation throughout India, Burmah, The Straits, Ceylon and the European Countries.

Wanted active Agents and liberal Commission. Saiva Siddanta Philosophy is the choicest product of the Dravidian Intellect.

ஆத்மபோதினி.

இப்பெயர் புனைந்த ஓர் பத்திரிகைமாதம் நான்குமுறைதிங்கட்கிழமைகள் தோறும் தத்துவஞ்ஞான சம்மந்தமானதும், உலகசமாசாரங்களும் நல்ல தமிழ் நடையில் பிரசுரிக்கப்பட்டுவருகிறது.

வருட சந்தா	ரூ 2—8—0	வேண்டியவர்கள் ஆத்மஞானபோதினி ஆபீஸ் "யாழ்ப்பாணம்" மானேஜரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
6 மாதத்திற்கு	ரூ 1—8—0	
பினங்கு, சிங்கப்பூர்	ரூ 3—0—0	

கோயம்புத்தூர் கலாநிதி.

மாதம் இருமுறை கோயம்புத்தூரில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. இதில் மத சம்மந்தமான விஷயங்களும் சமாசாரக்குறிப்புகளும் அடங்கியிருக்கும்.

வருட சந்தா ரூ 2—0—0.
ஆறுமாதத்திற்கு ரூ 1—0—0.

விற்பனைக்குத் தயாராயிருக்கும் புத்தகங்கள்.

தத்துவார்த்த மடங்கிய பகவத்கீதை அணா 4.
தென்இந்தியா சரித்திரம் ரூ 1—12—0.
பலிஜவாரு புராணம் காலிகோ பைண்டு ரூ 2—8—0.
இந்து விஷயநூல் ரூ 2—0—0.

(வேண்டியவர்கள்) கலாநிதி பத்திராதிபர் ஸ்ரீமான் S. P. நரசிம்மலு நாயடு அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்

இந்து சாஸ்திராபிமானி.

என்ற புத்தகமும் சிரேஷ்டமாலிகா, கல்லிடைக்கும்மி யென்ற புஸ்தகங்களும் திருநெல்வேலிஜில்லா கல்லிடைக்குறிச்சி வா. முத்துகிருஷ்ண ஐயரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம். இந்துசாஸ்திராபிமானி வெகு நல்ல புத்தகம். விலை அணா 6.

ஓம்

|| ஸ்ரீதக்ஷிணாமூர்த்யஷ்டகம் ||

மௌநவ்யாக்யாப்ரகடித பரப்ரஹ்மதத்வம் யுவாநம்
வர்ஷிஷ்டாந்தேவஸத்ருஷிகணைராவ்ருதம் ப்ரஹ்மநி-
ஷ்டை: |
ஆசார்யேந்த்ரம் கரகலிதசிந்முத்ரமாநந்தரூபம்
ஸ்வாத்மாராமம் முதிதவதநம் தக்ஷிணாமூர்த்திமீடே ||

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம்.

மௌனமாகிற வியாக்கியானத்தினுல் வெளியிடப்பட்ட பிர்ம்மத்தின் தத்துவத்தையுடையவரும், யௌவனமுள்ளவரும், பிர்ம்மத்தில் நிஷ்டையையுடைய வயது சென்ற சிஷ்யர்களான ரிஷிக்கூட்டங்களால் சூழப்பட்டவரும் ஆசாரியர்களுக்குள் உத்தமரும் கையினுல் செய்யப்பட்ட சின் முத்திரையை உடையவரும் ஆனந்த ரூபியும், தன்னிடத்திலேயே ரமிப்பவரும் சந்தோஷமான முகத்தை யுடையவருமாகிய ஸ்ரீதக்ஷிணமூர்த்தியை ஸ்துதிக்கிறேன்.

விஶ்வம் தர்பணத்ருஶ்யமாந நகரீதுல்யம் நிஜாந்தர்கதம்
பஶ்யந்நாத்மநி மாயயா பஹிரிவோத்பூதம் யதா நித்ரயா
ய: ஸாக்ஷாத்குருதே ப்ரபோதஸமயே ஸ்வாத்மாநமேவா-
த்வயம் ||
தஸ்மை ஸ்ரீகுருமூர்த்தயே நம இதம் ஸ்ரீதக்ஷிணாமூர்த்த-
யே ||௧||

கண்ணாடியில் காணப்படும் பட்டணம்போல தனக்குள்ளிருக்கும் ஜகத்தை நித்திரையினால் போல தன்னிடத்தில் இருக்கும் மாயையினால் வெளியில் உண்டானதுபோல் பார்க்கின்ற எந்த ஜீவன் (ய:) ஞ்ஞான தசையில் தன் ஆத்மாவை இரண்டாவது வஸ்து இல்லாததாகவே பிரத்தியக்ஷமாய் அறிகிறானோ (ஸாக்ஷாத் குருதே) அந்த ஜீவரூபியான குருரூபியாயிருக்கிற ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின்பொருட்டு இந்த நமஸ்காரம். (க)

𑌬𑍀𑌜𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌿𑌵𑌾𑌙𑍍𑌕𑍁𑌰𑍋 𑌜𑌗𑌦𑌿𑌦𑌂 𑌪𑍍𑌰𑌾𑌙𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌂 𑌪𑍁𑌨𑌃
𑌮𑌾𑌯𑌾𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌦𑍇𑌶𑌕𑌾𑌲𑌕𑌲𑌨𑌾𑌵𑍈𑌚𑌿𑌤𑍍𑌰𑍍𑌯𑌚𑌿𑌤𑍍𑌰𑍀𑌕𑍃𑌤𑌮𑍍 ।
𑌮𑌾𑌯𑌾𑌵𑍀𑌵 𑌵𑌿𑌜𑍃𑌮𑍍𑌭𑌯𑌤𑍍𑌯𑌪𑌿 𑌮𑌹𑌾𑌯𑍋𑌗𑍀𑌵 𑌯𑌃 𑌸𑍍𑌵𑍇𑌚𑍍𑌛𑌯𑌾
𑌤𑌸𑍍𑌮𑍈 𑌶𑍍𑌰𑍀𑌗𑍁𑌰𑍁𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑍇 𑌨𑌮 𑌇𑌦𑌂 𑌶𑍍𑌰𑍀𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑍇 ॥௨॥

விதைக்குள் முளைபோல் சிருஷ்டிக்கு முன்வேற்றுமை இல்லாததும் பிறகு மாயையால் கல்பிக்கப்பட்ட தேசகால சம்மந்தத்தினால் உண்டானநானாபேதத்தினால் ஆச்சரியகரமாய்ச் செய்யப்பட்டதுமான இந்த ஜகத்தை இந்திரஜாலவித்தைக்காரன்போலும் (விசுவாமித்திரர் முதலான) மகாயோகிபோலும் எந்த பரமாத்மா (ய:) சங்கல்பமாத்திரத்தினால் வெளிப்படுத்துகிறாரோ அந்த குருரூபியான ஸ்ரீதட்சிணாமூர்த்தியின் பொருட்டு இந்த நமஸ்காரம். (உ)

𑌯𑌸𑍍𑌯𑍈𑌵 𑌸𑍍𑌫𑍁𑌰𑌣𑌂 𑌸𑌦𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑌸𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌾𑌰𑍍𑌥𑌕𑌂 𑌭𑌾𑌸𑌤𑍇
𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑍀𑌤𑌿 𑌵𑍇𑌦𑌵𑌚𑌸𑌾 𑌯𑍋 𑌬𑍋𑌧𑌯𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌨𑍍 ।
𑌯𑌤𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌕𑌰𑌣𑌾𑌦𑍍𑌭𑌵𑍇𑌨𑍍𑌨 𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌭𑌵𑌾𑌮𑍍𑌭𑍋𑌨𑌿𑌧𑍌
𑌤𑌸𑍍𑌮𑍈 𑌶𑍍𑌰𑍀𑌗𑍁𑌰𑍁𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑍇 𑌨𑌮 𑌇𑌦𑌂 𑌶𑍍𑌰𑍀𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑍇 ॥௩॥

எந்த பிரத்திபகபின்ன பரமாத்மாவினுடைய ஸத்ரூபமான பிரகாசமானது இல்லாததற்குச் சமானமான பதார்த்தங்களை

அடைந்ததாய்க்கொண்டு விளங்குகிறதோ எந்த பரமாத்மா (ய:) தன்னை ஆசிரியித்த சிஷ்யர்களை தத்துவமஸி (அந்த பிரமம் நீயாகவே இருக்கிறாய்) என்ற வேதவாக்கியத்தினால் பிரத்தியக்ஷமாக அறியச்செய்கிறாரோ எந்த பரமாத்மாவின் (யஸ்) சாக்ஷாத்காரத்தினால் சமுசார சமுத்திரத்தில் மறுபடி திரும்புதல் உண்டாகமாட்டாதோ அந்த குருரூபியான ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியின் பொருட்டு இந்த நமஸ்காரம். (௩)

नानाच्छिद्रघटोदरस्थितमहादीपप्रभाभास्वरं
ज्ञानं यस्य तु चक्षुरादिकरणद्वारा बहिः स्पन्दते ।
जानामीति तमेव भान्तमनुभात्येतत्समस्तं जगत्
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ४ ॥

அநேகம் ஒட்டைகளையுடைய குடத்துக்குள் இருக்கும் மகா தீபத்தின் காந்திபோல விளங்கும் எந்த பிரத்தியகாத்மாவான ஸ்வரூபஞானம் கண் முதலான கருவிகள் வழியாக வெளியில் போகிறதோ (அறிகிறேன் என்று பிரகாசிக்கிற அந்த பிரத்தியகாத்மாவையே) இந்த சமஸ்தஜகத்தும் அநுசரித்து விளக்குகின்றது. அப்படிப்பட்ட குருமூர்த்தியான ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியின் பொருட்டு இந்த நமஸ்காரம். (௪)

देहं प्राणमपीन्द्रियाण्यपि चलां बुद्धिं च शून्यं विदुः
स्त्रीबालान्धजडोपमास्त्वहमिति भ्रान्ता भृशं वादिनः ।
मायाशक्तिविलासकल्पितमहाव्यामोहसंहारिणे
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ५ ॥

மிகவும் பிரமத்தை அடைந்தவர்களும் ஸ்திரீகள் பாலர்கள் அந்தகர்கள் மூடர்களுக்கு சமானமானவர்களுமாகிய சாஸ்திரவாதிகள் தேகத்தையும் பிராணனையும் இந்திரியங்களையும் உற்பத்தி விநாசங்களையுடைய (चलां) புத்தியையும் சூன்யத்தையும் நான் என்று ஆத்மாவாக அறிகிறார்கள். மாயை என்ற சக்தி

யின் விலாசத்தால் செய்யப்பட்ட மகா மோகத்தை போக்கடிக்க அந்த குருமூர்த்தியான ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியின் பொருட்டு இந்த நமஸ்காரம். (௫)

𑌰𑌾𑌹𑍁𑌗𑍍𑌰𑌸𑍍𑌤𑌦𑌿𑌵𑌾𑌕𑌰𑍇𑌨𑍍𑌦𑍁𑌸𑌦𑍃𑌶𑍋 𑌮𑌾𑌯𑌾𑌸𑌮𑌾𑌚𑍍𑌛𑌾𑌦𑌨𑌾𑌤𑍍
𑌸𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌃 𑌕𑌰𑌣𑍋𑌪𑌸𑌂𑌹𑌰𑌣𑌤𑍋 𑌯𑍋𑌭𑍂𑌤𑍍𑌸𑍁𑌷𑍁-
𑌪𑍍𑌤𑌃 𑌪𑍁𑌮𑌾𑌨𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌗𑌸𑍍𑌵𑌾𑌪𑍍𑌸𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑌬𑍋𑌧𑌸𑌮𑌯𑍇 𑌯𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌭𑌿𑌜𑍍𑌞𑌾𑌯-
𑌤𑍇
𑌤𑌸𑍍𑌮𑍈 𑌶𑍍𑌰𑍀𑌗𑍁𑌰𑍁𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑍇 𑌨𑌮 𑌇𑌦𑌂 𑌶𑍍𑌰𑍀𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍂𑌰𑍍𑌤-
𑌯𑍇 ॥௬॥

எந்த பிரத்தியகாத்மா கருவிகளின் ஒடுக்கத்தாலும் மாயையின் ஆதரணத்தாலும் ராகுவால் விழுங்கப்பட்ட சூரியசந்திரர்களுக்குச் சமானமாக ஸத்தாமாத்திரமாய்க்கொண்டு சுஷுப்தி அடைந்தவராக இருந்தாரோ எந்த ஆத்மா (ய:) விழிப்பு சமயத்தில் இதற்குமுன் தூங்கினேன் என்று ஸ்மரித்து அறியப்படுகிறாரோ அப்படிப்பட்ட பிரத்தியகாத்ம ரூபியான குருமூர்த்தியான ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியின் பொருட்டு இந்த நமஸ்காரம். (௬)

𑌬𑌾𑌲𑍍𑌯𑌾𑌦𑌿𑌷𑍍𑌵𑌪𑌿 𑌜𑌾𑌗𑍍𑌰𑌦𑌾𑌦𑌿𑌷𑍁 𑌤𑌥𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌵𑌵𑌸𑍍𑌥𑌾𑌸𑍍𑌵𑌪𑌿
𑌵𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌸𑍍𑌵𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌮𑌹𑌮𑌿𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌃𑌸𑍍𑌫𑍁𑌰𑌨𑍍𑌤𑌂 𑌸𑌦𑌾 ।
𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌕𑌟𑍀𑌕𑌰𑍋𑌤𑌿 𑌭𑌜𑌤𑌾𑌂 𑌯𑍋 𑌮𑍁𑌦𑍍𑌰𑌯𑌾 𑌭𑌦𑍍𑌰𑌯𑌾
𑌤𑌸𑍍𑌮𑍈 𑌶𑍍𑌰𑍀𑌗𑍁𑌰𑍁𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑍇 𑌨𑌮 𑌇𑌦𑌂 𑌶𑍍𑌰𑍀𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍂𑌰𑍍𑌤-
𑌯𑍇 ॥௭॥

பால்யம் முதலானதுகளும் ஜாக்கிரத்து முதலானதுகளும் அப்படியே எல்லா அவஸ்தைகளும் ஒன்றுக்கொன்று விட்டுப் பிரிந்த அளவிலும் தொடர்ந்தவரும் எப்போதும் உள்ளே நான் என்று விளங்குகின்றவருமாகிய தன் ஆத்ம சுவரூபத்தை எந்த பரமாத்மா (ய:) தன்னைச்சேவிக்கின்றவர்களுக்கு மங்களமான சின் முத்திரையினாலே வெளிப்படுத்துகிறாரோ அப்படிப்பட்ட குருரூபியான ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியின்பொருட்டு இந்த நமஸ்காரம். (௭)

𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌾𑌰𑌣𑌤𑌯𑌾 𑌸𑍍𑌵𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌤𑌃
𑌶𑌿𑌷𑍍𑌯𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌤𑌯𑌾 𑌤𑌥𑍈𑌵 𑌪𑌿𑌤𑍃𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌭𑍇𑌦𑌤𑌃 ।
𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤𑌿 𑌵𑌾 𑌯 𑌏𑌷 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌮𑌾𑌯𑌾𑌪𑌰𑌿𑌭𑍍𑌰𑌾𑌮𑌿𑌤𑌃
𑌤𑌸𑍍𑌮𑍈 𑌶𑍍𑌰𑍀𑌗𑍁𑌰𑍁𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑍇 𑌨𑌮 𑌇𑌦𑌂 𑌶𑍍𑌰𑍀𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑍇 ॥௮॥

எந்த இந்த மகாபுருஷன் மாயையினால் பிரமிக்கச் செய்யப்பட்டவனாய் சுவப்பனத்திலும் ஜாக்கிரத்திலும் ஜகத்தை காரிய காரணத்தன்மையாலும் சொத்தென்றும் எஜமானனென்றும் சம்மந்தத்தாலும் சிஷ்யன் ஆசாரியன் என்னும் தன்மையாலும் அப்படியே பிதாபுத்திரன் முதலான ரூபபேதத்தினாலும் பார்க்கிறானோ அப்படிப்பட்ட குருரூபியான ஸ்ரீ தட்சிணாமூர்த்தியின் பொருட்டு இந்த நமஸ்காரம். (௮)

𑌭𑍂𑌰𑌮𑍍𑌭𑌾𑌂𑌸𑍍𑌯𑌨𑌲𑍋𑌽𑌨𑌿𑌲𑍋𑌽𑌮𑍍𑌬𑌰𑌮𑌹𑌰𑍍𑌨𑌾𑌥𑍋 𑌹𑌿𑌮𑌾𑌂𑌶𑍁𑌃 𑌪𑍁𑌮𑌾𑌨𑍍
𑌇𑌤𑍍𑌯𑌾𑌭𑌾𑌤𑌿 𑌚𑌰𑌾𑌚𑌰𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑌿𑌦𑌂 𑌯𑌸𑍍𑌯𑍈𑌵 𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌯𑌷𑍍𑌟𑌕𑌮𑍍 ।
𑌨𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌕𑌿𑌂𑌚𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌵𑌿𑌮𑍃𑌶𑌤𑌾𑌂 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑌰𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌿𑌭𑍋𑌃
𑌤𑌸𑍍𑌮𑍈 𑌶𑍍𑌰𑍀𑌗𑍁𑌰𑍁𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑍇 𑌨𑌮 𑌇𑌦𑌂 𑌶𑍍𑌰𑍀𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑍇 ॥௯॥

சேதனாசேதனசுவரூபமான இந்த பிரபஞ்சமானது (𑌇𑌦𑌂) பூமி, ஜலங்கள், அக்கினி, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஜீவன், என்ற எந்த பரமாத்மாவினுடைய (𑌯𑌸𑍍𑌯) எட்டு மூர்த்திபாகவே விளங்குகிறதோ யோசித்துப்பார்க்கின்ற ஞானிகளுக்கு சர்வாகாரமான எந்தபரமாத்மாவைக் காட்டிலும் வேறான ஒன்றும் இல்லையோ அப்படிப்பட்ட குருமூர்த்தியான ஸ்ரீ தட்சிணா மூர்த்தியின் பொருட்டு இந்த நமஸ்காரம். (௯)

𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌤𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 𑌸𑍍𑌫𑍁𑌟𑍀𑌕𑍃𑌤𑌮𑌿𑌦𑌂 𑌯𑌸𑍍𑌮𑌾𑌦𑌮𑍁𑌷𑍍𑌮𑌿𑌨𑍍𑌸𑍍𑌤𑌵𑍇
𑌤𑍇𑌨𑌾𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑌵𑌣𑌾𑌤𑍍𑌤𑌦𑌰𑍍𑌥𑌮𑌨𑌨𑌾𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌚𑍍𑌚 𑌸𑌙𑍍𑌕𑍀𑌰𑍍𑌤𑌨𑌾𑌤𑍍 |
𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌮𑌹𑌾 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿 𑌸𑌹𑌿𑌤𑌂𑌸𑍍𑌯𑌾𑌦𑍀𑌶𑍍𑌵𑌰𑌤𑍍𑌵𑌂𑌸𑍍𑌵𑌤𑌃
𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑍇𑌤𑍍𑌤𑌤𑍍𑌪𑍁𑌨𑌰𑌷𑍍𑌟𑌧𑌾 𑌪𑌰𑌿𑌣𑌤𑌂 𑌚𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌮𑌵𑍍𑌯𑌾𑌹𑌤𑌮𑍍 ||௧௰||

𑌓𑌂 𑌤𑌤𑍍𑌸𑌤𑍍. 𑌶𑍍𑌰𑍀𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌪𑌣𑌮𑌸𑍍𑌤𑍁 ||

இந்த ஸ்தோரத்தில் இவ்வாறாக பரமாத்மாவுக்கு இந்த சர்வாத்மத்துவ மானது எந்த காரணத்தினால் வெளிபிடப்பட்டதோ அந்தகாரணத்தினால் இந்த ஸ்தோத்திரத்தின் (𑌅𑌸𑍍𑌯) அர்த்தத்தின் கேள்வியாலும் அவ்வர்த்தத்தின் மனனத்தினாலும் அதின் தியானத்தினாலும் இந்த ஸ்தோத்திரத்தைப் படிப்பதாலும் சர்வஸ்ரூபத்துவம் என்னும் மகத்தான ஐசுவரியத்துடன் கூடின பரமாத்மஸ்ரூபத்துவமானது தன்னாலேயே உண்டாகும். எட்டு விதமான மாயையில் பரிணமித்த அந்த போகப்பிரசித்தமான அணிமாதி அஷ்ட ஐசுவரியங்களும் தடையில்லாததாக சித்திக்கும்.

ஓம், தத், ஸத்.

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி அர்ப்பணமஸ்து.

C. நாராயணசாமி அய்யர்.

[பரப்பிரஹ்மமும் அதன் வியக்தாவஸ்தையும்]

(72-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

மனிதனுக்கு 7 அம்சங்களையும்கொடுப்பதுபிதுர்த்தேவதைகள். ரூபசம்பந்தப்பட்டவைகளைக் கொடுப்பது பர்ஹிஷத்பிதுர்க்கள். ரூபமில்லாதவைகளைக் கொடுப்பது அக்கினிஷ்வத் பிதுர்க்கள். மானிடசரீரம் பர்ஹிஷத் பிதுர்க்களால் உண்டாயிற்று. இவர்கள் தங்கள் சாயையைப் பிரித்துக்கொடுத்தவர்களாதலால் முதல் வர்க்கத்தவர்களுக்கு சாயாஜர்கள் என்று பெயர். விசுவகர்மாவினுடைய பெண் சஞ்ஞா என்பவள் புருஷனாகிய சூரியனையடையமுடியாமல் தன் சாயையைப் பிரித்துக்கொடுத்ததாக விஷ்ணுபுராணத்தில் சொல்லியிருப்பது இந்தமுதல் சாயாஜவர்க்கத்தைத் தான் குறிப்பிடுகிறது. அக்கினிஷ்வத் பிதுர்க்கள் இந்த வீடுகளில் பிரவேசிக்கும் வரையில் இந்த வீடுகள் ஜடங்களாயிருந்தன. ஸ்திரீபுருஷவித்தியாஸமற்ற சரீரமாகவுமிருந்தன. இந்த முதல்வர்க்கத்தினின்று இரண்டாவது வர்க்கமுண்டாயிற்று. முதல் வர்க்கத்தினர்கள் இதில் ஈடுபட்டார்கள். 3-வது வர்க்கம் சுவேதஜமாயிருந்தது. பிர்மலோசனையினுடைய சுவேதத்திலிருந்து மரீசியென்னும் பெண் பிறந்ததாக விஷ்ணுபுராணத்தில் சொல்லியிருப்பது இந்த சுவேதஜ வர்க்கத்தைத் தான் காண்பிவிக்கிறது. 3-வது வர்க்கத்தினின்றும் 4-வது வர்க்கம் ஜனித்தது. 3-வது வர்க்கமும் இதில் ஈடுபட்டது. 4-வது வர்க்கத்தில் மனிதனுடைய உருவம் முதலில் அண்டஜமாயிருந்து. பிறகு ஜராயுஜமாக ஆயிற்று.

முதலில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களில்லாமலும் பிறகு இந்த இரண்டு லக்ஷணங்களும் ஒரே சரீரத்தில் காணப்பட்டும் பிறகு வேறு சரீரங்களில் தோன்றவுமாரம்பித்தன. இவ்விதமாய் மானிட தேகம் பக்குவமாய்க் கொண்டு வருகையில் அக்னிஷ்வத் பிதுர்க்கள் கண்டு தங்கள் அபிவிர்த்திக்கு இச்சரீரங்களே தக்கவைகளென்று எண்ணி $2\frac{1}{2}$ கல்பங்களுக்குப் பிறகு $3\frac{1}{2}$ கல்பங்கள் வரையில் பிரவேசித்து வந்து பிறகு நின்று விட்

டார்கள் இவர்களுடைய பிரவேசத்திற்குப் பிறகுதான் அநேக மிருக மானிடர்கள் மானிடர்களானார்கள். அந்த அக்கினிஷ்வத்பிதுர்க்களுக்கு மானஸ புத்திரர்களென்று சொல்வதுண்டு. சிலர்கள் சரீரத்தில் பூராவாக பிரவேசித்தும் சிலர் ஒரு அம்சத்தை மட்டிலும் பிரவேசிக்கும்படி செய்தார்கள்.

நாம் இப்போது 4 வது கல்பத்தில் 5 வது வர்க்கத்திலிருக்கிறோமென்று சொல்லப்பட்டது. ஜீவ கோடிகள் இதற்குப்பிறகு 6, 7, வர்க்கங்களில் பிரவேசித்துப் பிறகு 5,6,7, கல்பங்களிலும் முறையே 1 முதல் 7 வர்க்கங்களிலும் பிரவேசித்து கடைசியில் மோக்ஷத்தையடைவார்கள். சூரிய மண்டலத்திலுள்ள பின்னும் அனேக கிரகமாலிகைகளும்மேற்சொல்லியபடியே மாறுதல்களை யடைந்து முடிவில் தான் சூரியமண்டலம் பிரளயத்தை யடையும். அநேக சூரியமண்டலங்களி லிருப்பதாலும் அவைகளெல்லாம் மேற்சொல்லியவண்ணமே மாறுதல்களையடைந்து பிரளயமான பிற்பாடுதான் மகாப்பிரளயம் ஸம்பவிக்கும். அப்பொழுது பிர்ம்மம் மாத்திரம் பாக்கியாக நிற்கும்.

இதன் விபரம் பிரம்மவித்தியா சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளின் விவரங்கள் பூராவும் வெளியாக்கப்படவில்லை. வெளியாக்கின வரையில்கூட இதில் பிரஸ்தாபிப்பது அஸாத்தியம். ஆகையால் மனிதன் வெகுகாலம் பந்தங்களுக்குள்ளாகாமல் தன்னை பந்தத்தினின்று நிவர்த்தித்து மோக்ஷத்தை யடைவதற்குவேண்டிய உபாயங்களைத் தேடவேண்டும். அதற்குப் பின்வரும் கேழ்விகளுக்கு மறுமொழிகளைத் தெரிந்துகொண்டு அதற்குத்தக்கபடி நடக்கவேண்டுவதே. அவையாவன:—(1) நான்யார்? (2) எங்கிருந்து வந்தேன்? (3) எங்கு செல்லவேண்டும்.? (4) வந்தகாரியமென்ன? (5) போவதற்குசெய்துகொள்ளவேண்டிய சாதனங்களும் இடையூறுகளாய் நிற்கும் பாதகங்களும் யாவை? (6) மரணத்திற்குப்பின் நடக்கும் விஷயங்கள் என்ன? (7) புனர் ஜன்மம் உண்டா இல்லையா? என்ற ஏழுகேள்விகளுக்கும் முறையே விசாரிப்போம்.

ஓம்தத்ஸத். (ப—ர்)

விவேகானந்த சுவாமிகள்.

இம்மகான் இவ்விந்தியநாட்டிற்குச்செய்த உபகாரம் இவ்வளவென்று அளவிடக்கூடியதன்று. நமக்காக அயல்நாடுகளிற் சென்று நம்மதத்தினுயர்வையும் உண்மையையும் போதித்து வந்தார். இப்பெருமை வாய்ந்தவரின் ஜீவ சரித்திரத்தை அறியவேண்டுவது அவசியமல்லவா? அவருடையசரித்திரத்தைச் சுருக்கமாகத் தருகின்றோம்:—இம்மகானுடைய தகப்பனார் கல்கத்தாநகரத்திற்கு அணித்தான சிமோலியாவென்னும் கிராமத்திலுள்ள பெரியவீட்டைச் சேர்ந்தவர்கள். கல்கத்தா ஹைகோர்ட்டில் அட்டரனி அட்லா (Attorney in law) வாக பெரும்கீர்த்தி பூண்டு வாழும் நாளில் தனக்கு பெரும்பொருள் கிடைத்தும் தனக்கே பற்றாது பிதுரார்ஜிதத்தைத் தவிர தன் சந்ததியாருக்கு யாதொன்றும் இவர் சம்பாதித்துவைக்கவில்லை. இன்னாரின்நாமதேயம் விசுவநாத தத்தனென்பர். இவர்களுக்குவெகுகாலம் ஆண்சந்ததியின்றி யிருக்கக் காசிசென்று விசுவேசுவரரை வழிபடாநிற்குமளவில் எல்லாம் வல்லசித்தர் கனவில் தாமே அவதரிப்பதாய் திருவாய்மலர அப்படியே 1862-ம் ஆண்டு ஜனவரி மாதம் 9உ சோமவாரமும் கூடியசுபதினத்தில் பிராம்ஹமுகூர்த்தத்தில் கன்னியிற் சந்திரனும் பதினொன்றில் குருபகவானும் பத்தில் காக்கை வாகனனும் நிற்க உலகம் விளங்கும்படி அருணோதயத்தில் இப்பூவுலகில் அவதரித்தார். இம்மகரிஷி வளர்ந்துவரும் நாளையில் தேவ பாஷையிற்சிறந்த உறவினர் ஒருவர் இவருடன் நித்திரைபோவது வழக்கமாகையால் அவர் இவ்வருமைக் குழந்தைக்கு அமரகோசத்தின் சில சுலோகங்களைச் சொல்லி வருவது வழக்கமுண்டு. இவர் அக்காலத்தே அவைகளைக்கேட்டவளவில் மறப்பதில்லை. இவருடைய தாய் ஒரு தரம் தாம் கேட்ட பாட்டை இராகத்துடனும் தோஷமின்றியும் பாடக்கூடுமாம். தகப்பனாரோ தயாளகுணமும் சாமர்த்தியமும் வாய்ந்தவர். இவருடைய பாட்டனோ உலகத்தைத் துறந்தவர். இத்தியாதி குணங்களும் இவரிடம் குடிகொண்டு ஐந்துவயது நிறைவதற்குள் “மகன் றந்தைக்கு ஆற்றுமுதவி இவன் றந்தை என்

னேற்றான் கொல்லென்னுஞ் சொல்" என்பதற் கிலக்கியமாக அமரத்தில் பாதி மனனமாகச் சொல்லும் சக்திவாய்ந்தார். இதுவே பிற்காலத்தில்பெரும் சாதனமாகவிருந்தது. இவருக்கு முதலில் விசுவேசுவரதுகிருபையால் பிறந்தமையின் வீரேசுவர தத்தரென நாமமிட்டார்கள். பிறகு வித்தியாரம்ப காலத்தில் நரேந்திர நாதனென வழைக்கப்பட்டார். இவருக்கு இப்பேர் தகும் தகுமெனப்பட்டது. இளம்பிராயத்திலேயே பக்தி மிகுந்திருந்தது. இவர் அக்காலத்த இரக்ஷண்ணியசேனை என் றழைக்கப்படும் சர்லவேஷன் ஆர்மிதெருவிற் காண்பாராயின் அதைப் பார்த்த வண்ணமே தொடருவார். இவருகத இருக்கும்பொழுதே நிஷ்டையிற்போவது சகஜமாக இருந்தது. அக்காலத்து தம் வயதினரோடு கூடி விளையாடிக்கொண் டிருக்கும்போதே சமாதி கூடினர். கூட வந்த பிள்ளைகள் ஒரு பாம்பைக்கண்டு பயந்து ஓடி நின்று நரேந்திரரைக்கூவ இவர் அறியாத்துயிலிலிருந்தனர். சர்ப்பம் தனது படத்தைவிரித்து குடைபிடித்தது. அதைக்கண்ட சிறுவர்கள் நரேந்திரன் சென்றானென்று அலறி தாய் தந்தையரிடம் முறையிட அவர்கள் வரவும் காலம்விலகவும் நரேந்திரனை எழுப்ப அவர் ஒன்றும் அறியாதவராகையால் சாதாரணமாகஎழுந்திருந்தார். அவனை எவ்விதமாகவிருந்தாயென்று கேட்க ஆநந்தமடைந்திருந்தேனென்றார். இளம்பிராயத்திலேயே குடநாட்டாரால் எழுதப்பட்ட சாஸ்திரங்களையும் தேசத்திலுள்ள தத்துவநூல்களையும் ஆராய்ச்சிசெய்துவந்தார். அதற்கு அறிகுறியாக தன் பன்னிரண்டாம் பிராயத்தில் ஹெர்பெர்ட்டு ஸ்பென்சரென்னும் சாஸ்திரக்ஞரால் எழுதப்பட்ட முக்கிய விஷயங்கள் (First principles) என்னும் புஸ்தகத்தை வாசித்து அதிற்கண்ட குற்றங்களை ஆசிரியருக்கு எடுத்துக் காட்டினர். ஆசிரியர் அகமகிழ்ந்து நரேந்திரரை சாஸ்திர ஆராய்ச்சியில் அதிக ஊக்கம்கொள்ளும்படி தூண்டி எழுதி விடுத்த பத்திரத்தை இன்றும் ஒரு தூண்டாவிளக்காக பலூர் மடத்தில் வைத்திருப்பதைக் காணலாம். தன் உறவினரில் ஒருவர் அதிக கஷ்டமாகிய சாஸ்திரத்தைப் போதிக்க அதை நன்றாக அறிந்தார். இது முதலாக சாஸ்திர ஆராய்ச்சியிலிறங்கினர். அத்துறை போயும் தன் கல்வியை விடவில்லை. பதினெட்டாம்

பிராயத்தே B. A. பரிக்ஷையிற் றேறினர். இக்காலத்தில் இவருக்கு குடநாட்டு சாஸ்திர வுற்பத்தி ஜாஸ்தியாக விபரீதமாகத் தோற்றிற்று. இந்திய தேசத்திலுண்டாகிய மதங்களை நம்பாது போகும்படி செய்தது. கொஞ்சகாலத்திற்குள் குடநாட்டு சாஸ்திரங்களையும் ஒப்ப மனம் வரவில்லை. இக்காலத்துத் தான் தன்வயதில் இளையவரும் வித்தியாவிஷயத்தில் முதியவரும் கூச்பேகார் உயர்தரகலாசாலை பிரதமாசிரியருமாகிய புரோஜேந்திரநாத ஸீல் M. A. (Brogendra Nath Seal M. A.) என்பவருடன் பழகநேர்ந்தது. இருவரும் ஒருசாலை மாணுக்கர். அக்காலத்து பிரசித்தி பெற்றிருந்த பிரின்ஸிபால் வில்லியம் ஹேர்ஸ்டி என்பவரின் சீடர்கள். அவர் பின்வருமாறு எழுதுகிறார். "இக்காலத்தே தான் இவரை ஹியூம் ஆசிரியரையும் ஹெர்பர்ட்டு ஸ்பென்ஸரையும் வாசிக்கும்படி சொன்ன இருவருக்கும் சிநேகிதரான சீதநாதநந்தி என்பவரால் அழைத்துவரப்பட்டார். அதற்கு முன் இவரை பார்த்ததுண்டே யொழிய பேசும் வழக்கமில்லை. இப்பொழுது இவர் தன்னுடைய சந்தேகங்களை நிவர்திசெய்யும்படி வேண்டினர்.

ஆரம்பத்திலுள்ளவர்களுக்குத் தகுதியானதும் ஆன்மபோதத்திற் குரித்தானதுமான ஒரு வழியான நூல்களைச்சொல்லும்படி வேண்டினர். நான் சிலவற்றைக் குறிப்பிட முன்னமே படித்த குடநாட்டு சாஸ்திரப் பயிற்சியால் சூன்னிய வாதியாக்கிற்று. அன்றியும் அவருக்கு சாந்தமாகப் படித்து அதன்மூலமாக அறியும் உணர்ச்சியின்றி ஒவ்வொன்றையும் நேரில் அறிய விரும்பினர். இப்பொழுதுதான் அவரிடத்தில் எனக்கு அதிகப் பிரியமும் உண்மையில் கஷ்டங்களை நிவர்த்திக்கவும் பாடுபடுவரென தோன்றிற்று.

பிறகு இவருக்கும், சீதநாதருக்கும் உலகத்தில் ஜனித்த பக்தி, நற்குணம் சிலவாய்ந்தவரி லொருவருமாகிய ஷெல்லி ஆசிரியரின் விருத்தாந்தங்களைச்சொல்ல ஆரம்பித்தேன். சாஸ்திரிகளின் வாதங்கள் இவரை ஒருவழிப்படுத்த இயலாமற்போயின ஷெல்லிஆசிரியரின் ஆழ்ந்தகருத்துக்குள் மனதைக் கவர்

தன. அதுமுதல் உலகம் மித்து என்பதை மறந்து ஆன்மலாப த்தை நாடக்கூடிய பொருளுண்டென்று தெரியலாயிற்று.

இப்பொழுதுஷெல்லி சொல்லியதைவிட அதீதமாகியபரப் பிரம்ம சொரூபத்தைப்பற்றி இக்காலத்துத்தான் பேசத் தொட ங்கினேன்" என்று இவ்விதமாக எழுதுகிறார். இப்படிப் பரப் பிரம்மத்தைச் சொல்லி விசாரிக்கத் தொடங்கியபிறகுதான் இவ ருக்கு சற்று ஆத்துமகிலேசம் ஒடுங்கிற்று. இக்காலத்தேதான் கிறிஸ்தவமார்க்க மேற்றிராணிகள் (Bishops) ஹீபர், டப் என்பவரின் பரிசீலனைகீழ் அதி மேதாவிகளாகிய மதுசூதனதத் தர், கிருஷ்ண மோகன பனர்ஜிபோன்றவர்கள் கிறிஸ்து மதத் தை ஒரு நொடிப்போதில் யோசனையின்றி தழுவலாயினர் இப் பேர்ப்பட்டவர்களைக் காணும்பொழுது கடவுளை நேரில் கண்ட துண்டாவென்று கேட்கும் பழக்கமிருந்தது. இப்படிக் கேட் டுக்கொண்டுவரும்பொழுது ஒரு கேவல சன்னியாசி தான் கட வுளைக் கண்டதாகச்சொல்லி உன்னைத்தான் நான் வெகுநாளாகத் தேடிக்கொண்டிருப்பதாகச் சொன்னார். இச்சந்நியாசி தான் இவரது குருவாக உலகம் போற்றும் சுவாமி ராமகிருஷ்ண பரம ஹம்ஸர். இம்மகான் வங்கதேசத்தில் ஹூக்ளி ஜில்லாவில் காமர்புகர் என்னும் ஊரில் அந்தணர் வருணத்தில் பிறந்து இள ம்பிராயத்திலே தமக்குரிய சடங்குகள் செய்விக்கப்பெற்று துற வறமடைந்து பலரால் பலவிதமாக ஆன்ம தத்துவங்கள் கற்பிக கப்பட்டு முடிவில் கல்கத்தாவுக்கு அணித்தான தக்ஷிணேசுவர த்திலுள்ள காளிகாதேவி ஆலயத்தில் மகாதேவருக்குப் பிரிய மான வில்வமாநீழலில் சமாதிகூடும் இயல்பினராயினர். அந்நா ளில் அவரைப்பார்க்கத் திரளான ஜனங்கள் கூடுவது இயல்பாக விருந்தது. ஒருதரம் பார்த்தவுடன் சாதாரணமானவராகக்கா ணப்பட்டு திரும்பிப்பார்க்கும்பொழுது ஈசுவர சந்நிதியில் இரு ப்பதுபோல் நம்மனம் அவரிடம் காந்தம் கண்ட பசாசம் போல்இழுத்துக்கொள்ளப்படும்இயல்புவாய்ந்தவர். கீர்த்திவாய் ந்தவரும், பிரம சாமாஜத் தலைவருமாகிய பிரதாபசந்திரசேன ரே யொருக்கால் அவரைப்பற்றி பேசும்பொழுது அவருக்கும் னக்குமென்ன விருக்கிறது? நானோ ஆங்கிலேய மாதிரியாக

நாகரீகமடைந்து நானே அதிகம் தெரிந்தவனென இருமாப்படைந்து, நன்கறிந்த வாதியெனப் பேர்வாங்கியிருக்க அவரோ ஏழையும் மூடனும், அநாகரீகனும், வியாதிக்கிடங்கொடுத்தவனும், விக்கிரக ஆராதனைக்காரனும் இந்துவுமாகும். உலகத்திலேயே கீர்த்தி பெருமைவாய்ந்த பாஸெட்டு, டிஸராலி, ஸ்டான்லி, மாக்ஸ்முல்லர், (Fawcette, Disraeli, Stanley, Maxmuller) இடம் அவர்களை பேசக்கேட்டயான் இவ்வேழை சந்நியாசியைக் கண்டமாத்திரத்தில் எவ்வளவு காலமாயினும் பசிதாகம் முதலியவையின்றி பின்தொடர இச்சையுடையவனாகிறேன்' என்று சொல்வராயின் அவர் பெருமையை அளக்கவல்லார் யார்? இப்பேர்பட்டவரை நமதுநரேந்திரர் பார்த்தார். அன்றுமுதலே அவரது சிடரானார். ஒரு சமயத்தில் பரமஹம்சர், விவேகானந்த சுவாமிகள் உலகத்திலேயே ஒரு கிளர்ச்சியையுண்டாக்கி பிறகு தன் பலத்தையும் கடவுளையுமறிந்து சமாதிகூடுவரெனச்சொல்லினர். கொஞ்சகாலத்திற்குப் பிறகு ராமகிருஷ்ண பரமஹம்சர் மகா சமாதியடைய விவேகாநந்த சுவாமிகள் ஆண்டினிளையராயினும் தன்தோழசந்நியாசிகளால் தலைவராக நியமிக்கப்பட்டார். சிறிது காலத்திற்குப்பிறகு தன்தோழசந்நியாசிகளை அங்கேயே நிறுத்திவிட்டுதான் இந்தியாமுழுதும் கால்நடையாகச் சென்று ஒவ்வொரு மதத்தினது துணிபையும் அறியவிரும்பி புறப்பட்டார். சிலகாலம் இப்பொழுது பௌத்தமதத்தினருக்கு அருகராகவிருக்கும் திபெத்து தேசத்திலும் இன்னும் அநேக விடங்களிலும் அலைந்து அந்தந்த மதக்கொள்கைகளை நன்கறிந்து வெளிவாரலாயினர். இம்மாதிரி ஒருசமயம் இவர் ராஜபுதனத்தில்சஞ்சரித்துக்கொண்டிருக்கையில் ஒரு தினம் ரயிலில் பிரயாணம் செய்யநேரிட்டபொழுது ஒரு பனியர் (கோமுட்டி) கூடபிரயாணம்செய்ய நேரிட்டது. அவர்சந்நியாசியைப்பார்த்து சந்நியாசம் கெட்டதென்றும் உலகத்தில் பொருளீட்டலே பெரும் காரியம்என்றும் சொல்லிவந்ததுமின்றி நான் சம்பாதிப்பதால் சாப்பிடுகிறேனென்றும் நீர் சம்பாதிக்க இஷ்டப்படாததால்பட்டினி கிடக்கவேண்டியதுதானென்றும் சொன்னார். சுவாமிகள் யாதொன்றும் சொல்லாது இருந்தார்.

(பின்னும்வரும்) சோமசுந்தரதேசிகர்.

ஓம்:—

ஸ்ரீ பரமேசுவரனும் ஓர் தனவானும்.

ஒரு காலத்தில் ஜெகத்ரெக்ஷகராகிய பரமேஸ்வரன் பார்வதி சமேதராய் ஆகாசமார்க்கமாய்ச் செல்லுகையில் பார்வதி கீழ்நோக்கிப்பார்க்க ஒரு பெரியநகரம் காணப்பட்டது. அந்நகரின்கண் சிறுகுடிசில்களும் சாமான்ய வீடுகளும் ஜீர்ணமாய்ப் போன பல ஏழைக்குடிசைகளும் இவைகளின் மத்தியில் ஒரு பெரிய ஏழு உப்பரிகையுள்ள அழகான வீட்டின் சிகரத்தில் ஏழு தங்கக்கலசங்கள் அமைக்கப்பெற்றதும் விசித்திரமான அம்மாளிகையைப் பார்த்ததேவி சொல்லுகிறாள் ஏ! சுவாமின்! இஃதென்ன ஆச்சரியம்? இவ்வளவு வித்தியாசமிருக்கக் காரணமென்ன? அந்தரியாமியாகிய தங்களுக்குத் தெரியாததொன்றுமில்லையே'' அதற்கு பகவான் ''நான் சொல்லுவதினால் உனக்கும் ஒன்றும் விளங்காது. நேரில் காட்டுகிறேன் வா'' என்று சொல்லி தான் வயது முதிர்ந்த ஒரு கிழவனாகவும் அம்மை ஒரு கிழவியாகவும் வேடம் பூண்டு பூமியிலிரங்கி அம்மாளிகையின் வாசலில் போய் நின்றார்கள். அங்கு ஒரு போர்வீரன் போன்றவன் உருவின கத்தியும் கையுமாக காவல் செய்துகொண்டிருப்பதைப் பார்த்து அவனிடம் அணுகி ''ஐயா! இவ்வீட்டு எஜமானனைக் காண விரும்புகிறோம். நீ உள்ளே யேகி எங்கள் வரவை அவருக்கு அறிவிக்கவேணுமென்று'' கெஞ்சிக்கேட்டுக்கொண்டார்கள். அதற்கு அக்காவலோன் அடே பிச்சைக்காரர்களே! என்ன தைரியமடா உங்களுக்கு? நீங்களாவது கோடீசுவரனை எங்கள் எஜமானனையாவது பார்க்கிறதாவது! அவர் இந்த வீட்டில் ஏழாவது உப்பரிகையில் நவரத்தின சகிதமாயும் சொரணமயமாயும் அமைக்கப்பெற்ற சோபாளாவில் இருக்கிறார். இந்திரன் கூட போகக்கூடாத விடத்திற்குப்போக பிச்சைக்காரர்களாகிய நீங்கள் போக விரும்பலாமா? போங்கள், போங்கள், நீங்கள் இவ்விடம் நிற்பதைக் கண்டால் எஜமானன் என்னை வேலையில்

விட்டுத்தொலைத்துவிடுவார். 'சட்! போங்கள்என்று தூஷ்யமாகச் சொன்னான். அவனென்ன செய்வான்பாபம், எஜமான் கட்டளை அப்படி. கொஞ்சநேரம் சென்ற பிறகு நித்திரையால் அவனை மயக்கி சதிபுருஷாளிருவரும் ஒரே நிமிஷத்தில் ஏழு உப்பரிகையையும் தாண்டி அவ்விடம் போய்ப்பார்த்ததில் பூமியில் ஸ்பரிசம் படாதபடி அவன் காலை ஊஞ்சல் சங்கலியில் உதைத்துக் கொண்டு பஞ்சணையில் சாய்ந்துகொண்டு புன்னகையுடன் அவன் மனைவி அருகில் நிற்க தன் கொள்பேர குழந்தைகளுக்கு தங்கப்பேலாவிலிருந்து பால்சாதம் ஊட்டிக்கொண்டிருக்கிற குமாரத்தி பேத்தி முதலிய பரிவாரங்களுடன் இருக்குந் தருணத்தில் இவ்விருவரும் கூற்சம்போல் போய் நின்றார்கள். அவர்களைப்பார்க்கவே அந்த எஜமானன் இந்த பிச்சைக்காரர்களை யார் இங்கு விட்டதென்று சிம்மம்போல் கர்ச்சிக்கவே அதைக்கேட்ட கிங்கிரரான இரண்டு சேவகர்கள் இவர்கள் கழுத்தைப்பிடித்து கரகரவென்று இழுத்து வெளியே தள்ளிவிட்டார்கள். பாதி உயிர் போனதும் போகாததுமாய் மேல்மூச்சு கீழ்மூச்சுவிட்டுக்கொண்டு நிற்கும் சமயத்தில் சுவாமியைப்பார்த்து பட்ட அவமானம் போரும். உமக்கு யார் ஈசுவரனென்ற பெயர் கொடுத்தார்களோ அவர்களைச் சொல்ல வேண்டும், இவ்விதகஷ்டத்தை அனுபவிக்கவா இங்கு கூட்டிக்கொண்டு வந்தீர். இந்தவிர்த்தாந்தத்தை விமானத்திலேயே இருந்துவாயால்சொன்னால் கேட்கமாட்டேனோ, வெட்கக்கேட்டை வெளியிற் சொல்ல வேண்டாம், நாம் விமானத்திற் கேகுவோமென்றாள். பரமசிவனும் அப்படியே ஆகட்டுமென்றும் தன்கடாக்ஷவீட்சண்ணியத்தால் அந்தெஜமானனுக்கு முன்னிலும்இருமடங்கு அதிகசெல்வம் உண்டாகக்கடவதென்று அனுக்கிரகப்செய்து விமானப்சென்றார்கள் இதைக்கேட்டஉமைபவள் 'குழுக்கட்டைதின்ன நாய்க்த குருணி மோர் தக்ஷிணையா? என் கழுத்து கால்களின் வலி இன்னும் தீரவில்லையே, அப்பாபிக்கு அனுக்கிரகம் வேறே செய்தீர்களே, எனப் பரிகாசம் நவின்றாள். பிறகு சற்று தூரம் கடக்கவே மற்றொருசாதாரணமானகிராமம் தோன்றிற்று. ஆங்கு சூரியாள் சந்திராள் வாசம் செய்கிற வீடு ஒன்று காணபட்டது. அதைப்பார்த்து நீலகண்டன் ஏ! லலனு! கீழே இறங்கி அதோ தெரிகிற வீட்டைப்பார்ப்போம். அங்கு விசித்திரத்தைப் பார் எனப்புகன்றார். அதற்குப் பாாவதி பணக்காரன் வீட்டுக்குப் போய்ப் பட்டபாடு போதாதா? மழையும் வெயிலும் அடித்துக் கொண்டிருக்கிற இந்த வீட்டில் நாம் போய் ஆகவேண்டிதென்ன? ஆயினும் தங்கள் ஆக்ஞைக்கு அன்னியதாக ஒன்றும் செ

ய்வேன் என்றும் இருவரும் கீழிரங்கி அவ்வீட்டுவாசலில்போய் "யார் உள்ளே? எனக்கதவிடித்தார்கள். அப்போது வீட்டிற்குளிருந்த ஒரு அம்மாள் வந்து கதவைத்திறக்கவே இவர்களைக் கண்ணுற்று இவர்களை உபசரித்து உள்ளேயழைத்துப்போய் பிரக்ஷாளனத்திற்கு ஜலம் கொடுத்து இரண்டு மணைகளைக்கொண்டு வந்துபோட்டு அதில் வீற்றிருக்கச் செய்து "எங்களுடைய கிரகம் இன்றுதான் பரிசுத்தமாயிற்று. தங்கள் கோரிக்கையைச் சொன்னால் என்னால் முடியுமட்டும் முடிக்கப் பிரயத்தினப்படுகிறேன்" எனக்குளிர்ந்த முகத்துடன் கேட்டாள். அதற்கு அவர்கள் சாப்பிட்டு இரண்டு நாளாயிற்று. அதிசீக்கிரத்தில் பிக்ஷை கொடுத்தால் எங்களுயிர் நிற்கும், இல்லாவிட்டால் நாங்கள் இவ்விடத்திலிறந்து பழியை உங்கள் மேல் போடுவோம் என்றார்கள். அதற்கு அப்பதிவிரதா சிரோன்மணி செப்புகிறாள் "அதிதிபூஜைக்கு மேன்பட்டது யாதொன்றுமில்லை, கொஞ்சநேரம் பொருத்துக்கொள்ளுங்கள். நானும் என் கொழுநரும் ஆகிய இருவருமே இங்ஙனம் வசிக்கின்றோம். இதோ தங்களுக்கு எதிரே கட்டியிருக்கிற பசு வேளைக்கு கால் படி பால் கறக்கின்றது. காலையில் கறக்கிற பாலை எனது பர்தா விற்றுக்கொண்டு வந்து அதில் வரும் பணத்தைக்கொண்டு போஜன சாமக்கிரியைகள் வாங்கி பகலில் அவர் போஜனம் செய்வதும் சாயங்காலம் பாலில் கிடைக்கும் துட்டைக்கொண்டு இரவில் நான் போஜனம் செய்வதும் எங்களுடைய வழக்கம். இதனால் தங்களுக்கு பிக்ஷையிட மனமில்லையென்று சொல்லவரவில்லை. பால் கொண்டுபோனவர் இன்னும் வரவில்லை. அவர் வந்தாலும் அவருக்கும் உங்களிருவருக்கும் அது போதாதுமன்னிக்கவேண்டும். இதோ பிரையிலிருக்கிற மஞ்சளை யெடுத்து என்னை சுமங்கிலி என்றழைக்கும்படியான மாங்கல்யத்திற்தொடுத்து அதற்கு பதிலான திருமங்கலியத்தை விக்கிரயம் செய்து தங்களுக்கு பிக்ஷை செய்விக்கிறேன். கொஞ்சம் பொருத்துக்கொள்ளவேண்டும். இந்த குடிசையை தாங்கள் சொர்ண மாளிகையாகப் பாவித்து நான் கொடுக்கும் அற்ப உணவை அமிர்தமாகப்பாவிக்கவேண்டும்" என நடுநடுங்கிப்பிரார்த்தித்து "இதோ அதிசீக்கிரத்தில் தங்கள் மனோரதத்தைநிறைவேற்றுவேன்என்று ஒரு தட்டான் கடைக்குச்சென்றாள். இவள்பரபரப்பைக்கண்டதட்டானும் அதை அரைவிலைக்கு வாங்கிக்கொள்ளவும் அதினால்கிடைத்தகாசைக்கொண்டு சகல பதார்த்தங்களும் வாங்கி அதிசீக்கிரத்தில் திவ்யமாய் டக்குவம் செய்து அவ்விரு அதிதிகளையும் உட்காரவைத்து அவர்களுக்கு விருந்திட்டிருக்கும் சமயத்தில் பால் விற்கப்போன புருஷன்வந்து மனைவியை நோக்கி! ஏ வனிதா

என்தௌர் பாக்கியத்தை என்னென்று எடுத்துரைப்பேன்! இன்று யார் முகத்தில் முழித்தேனோ தெரியவில்லை. கொண்டு போன பால் கைதவறிக் கொட்டிப்போயிற்று. நானும் பட்டினியாக இருக்க தெய்வ சங்கல்பம் போலும் என அழுப்படாத துக்கத்துடன் கதவிடித்தான். அவன் உள்ளே வந்து பார்த்ததும் அதிதிகள் போஜனம் செய்ததும் தானிதுவரைகண்ணால் பாராதபோஜனபதார்த்தங்களைக்கண்டதும் மிகவும்ஆச்சிரியமெயதி இதென்னகனவோ? நினைவோ? நடந்ததைச்சொல் என்றான். அவ்வுத்தமி அதிதிகளுக்கு உபசரிக்கவேண்டிய மகா தர்மத்தை தாங்கள் எனக்கு உபதேசித்ததை சிரசின்மேற்கொண்டு தங்களுத் திரவன்னியில் தங்களுக்குச் சுதந்திரமான மாங்கலியத்தை விக்கிரயம் செய்து அதிதிபூஜை செய்கிறேன் பாருங்கள் என்மேலுள்ள குற்றத்தைப் பொறுத்தருளவேணும் என்று அவன் பாதங்களில் வணங்கி நிற்க, அதற்கு அவர் ஆ! எனது ஆருயிர் சிகாமணியே! இப்பேர்க்கொத்த மனைவி எனக்கு கிடைத்த பாக்கியத்தை யாருடன் எடுத்துரைப்பேன். நீசாக்ஷாத் அருந்ததியே, மாங்கலியத்தை விற்று அதிதிபூஜை செய்கிற உத்தமியாகிய உன்னை எல்லோரும் போற்றுவார்கள். அப்பாக்கியம்எனக்கு கிடைக்கவில்லையே, நீதான் பதிவிரதை, நல்லது அவர்கள்பிக்ஷையைக் கவனிப்போம் வா என்று அவர்களுக்கு உபசரிக்க நம் கிழவனும் கிழவியும் ஒரு பருக்கை கூட மீதிவைக்காமல் விலாப்புடைக்க உண்டார்கள்.

பிறகு அந்த ஸ்திரீ புருஷாளிருவரும் வயிறுவிம்ம சாப்பிட்டோம் என்றார்கள். இதைக்கேட்ட அவ்வுத்தமர்களிருவரும் இன்றுதான் அதிதிபூஜை எங்களுக்கு சித்தித்தது. நாங்கள் என்ன பாக்கியம் செய்தோமோ, உங்களைப்போன்ற மஹான்கள் எங்களுக்குகிடைத்தார்கள், என இருவரும் அவர்கள் தாள் பணிந்து அவர்களுக்கு விடை கொடுத்தனுப்பினார்கள். பகவான் புன்னகைசெய்துகொண்டு உக்கிரமான தனதுநெற்றிக்கண்ணால் அப்பசுவை அக்கினிபகவானுக்கு விருந்தளித்திட்டு தேவியுடன் விமானம் சென்றனர். இதெல்லாம் கண்ணூற்க்கண்ட உமை மிக்க கோபங்கொண்டு' தெளிவாயிருக்கிறது. உண்ட வீட்டில் கன்னமிடலாமா? அப்பாவிக்கு இரட்டத்தனை ஐசுவரியம்கொடுத்துஇ

ந்தமகானுபாவர்களுக்கு ஜீவாதாரமாயிருந்தபசுவையும் சம்ஹரித்துவிட்டீரே! பேஷ் நிரம்ப நன்றாயிருக்கிறது. உங்களை யார் நம்புவார்கள்? நானும் பயப்படுகிறேன், இவ்வளவு காலம் தங்களிடமிருந்தும் உங்கள் குணம் எனக்குத்தெரியாமல் போய்விட்டது. உம்முடைய சொரூபத்தை இன்றுதான் அறிந்தேன். போதும் போதும் கைலாயம் செல்வோம் வாரும், இனி என் நாளை தங்களிடமிருந்து வெகு ஜாக்கிரதையாகக் கழிக்கவேண்டுமென்றாள். அதற்கு கங்காதரன் என்னவிருந்தாலும் நீ ஸ்திரிஜாதிதானே! தேவரகசியம் உனக்குத்தெரியவில்லையே, இன்றைக்கு உனக்குத் தெளிவாய்க்காண்பிக்கிறேன் வா என்று விமானம் ஏறிச்சென்றார்கள். கொஞ்சகாலம் சென்று லோகாந்திரம் போக உத்தேசித்து முதலில் நரகலோகம் சென்றார்கள். ஆங்கு அநேகமான அக்கினி வளர்த்து அதில் இருப்புச்சங்கிலியைப் பழுக்கக்காய்ச்சி அதை தேகத்தில் போட்டிழுக்க அகோரமாய் ஓலமிட்டு அழுதுகொண்டிருக்கிற சிலரையும் இன்னும் அநேகவிதமான எமபாதைக்குட்பட்டு அவஸ்தைப்படுகிற அநேகரையும் காண்பித்து என் பிரியே! அதோ தெரிகிறார்களே, அவர்களைப்பார் அவர் படும்பாட்டைப்பார். அவர்கள்தான் உன்னையும் என்னையும் ஏழாவது உப்பரிகையின் கீழே தள்ளினவர்கள். அதுபோல இதோ தெரிகிற எல்லா ஜனங்களும் சிருஷ்டி ஸ்திதி சம்ஹாரம் செய்கிற ஈசுவரன் ஒருவர் இருக்கிறார் நாம் அவருடைய ஆதீனத்துக்குட் பட்டவர்கள் என கொஞ்சமேனும் நினையாமலிருப்பது மட்டுமல்ல, தேவநிந்தனை குருநிந்தனை பிராணிஹிம்சைஜீவகோடிகளுக்கு அபகாரம் முதலிய மகாபாதகங்களை கூசாமல் செய்துகொண்டு நான் சுகி, நான்தான் திரவியவான், நான் ஜனக்கட்டுள்ளவன், எனக்குச் சமமானவர் ஒருவருமில்லை என்று ஆசிரயித்துக்கொண்டு எல்லாம் தனக்குத்தானென்றும்தன்னைத்தவிர மற்றவர்கள் கஷ்டபடத்தான் பிறந்திருக்கிறார்களென வீணெண்ணம்கொண்டு கொடியபாபம் செய்து இதோகோடானுகோடிஜனங்கள் தபித்து அலருவதைக்கண்ணால் பார். இஷ்டமானால் சித்திர குப்தனைத்தருவித்து அவரவர்கள் செய்தபாபங்களையும்அவரவர்களுக்கேற்ற தண்டனையையும் இவ்வளவுகாலம் அனுபவிக்க வேண்டுமென்பதையும் தனிததனியாய் குடும்பம்

குடும்பமாயும் கணேக்கைப்படிக்கும்படி செய்கிறேன்? இஷ்டமா? எனக்கேட்டார். அதற்கம்மை போதும் போதும். இக்கண்டரு வியைக் காணச் சகிக்கவில்லே. வேறிடம் செல்வோம் என்ருள், பிறகு உத்தமலோகம் போக அவ்விடம் சாலோக்கியப்பதவியை யடைந்த சிலர்பூஜாதுரந்தரர்களாய் ஈசுவராராதனே செய்கிற சில ரைப்பார்த்து அதோ தெரிகிற ஸ்திரீ புருஷாளிருவரையும் பார்! அவர்களின் சுகங்களைப்பார். நான் எறித்திட்ட பசுவும் அதோ நிற்கின்றது. காமதேனுவாய் விளங்கி ஈசுவராராதனேக்கு வேண்டிய சாமக்கிரிகளேக்கொடுத்து அது பெற்ற பாக்கியத்தை ப்பார்! என்று சொல்லவே பார்வதிதேவி மிகவும் மனமகிழ்ந்து ஆச்சரியப்பட்டு கபட நாடக சூத்திரராகிய உம்முடைய மகி மையை யறியாமல் தாமரைப் புஷ்பத்தினருகிலுள்ள தவளேயை ப்போல் யான் அவிவேகமாய்மொழிந்திட்ட வசனங்களே முற் றிலும் மறந்து எனக்கு விவேகத்தைப்புகட்டி என்னே ஆட்கொ ண்டருளுமென்று பணிந்தாள். உடனே இருவரும் கைலயம் புரிக்கேகினர்.

இக்கதையை கவனமுடன்படிக்கும் என் நேயர்காள்! லவு கீக சுகத்தைக்கொடுக்கும்படியான கேவலம் திரவியம் வேண்டு மா; அல்லது 'சுவர்க்காதிலோக சுகப்பிராப்தியைக்கொடுக்கத்த க்கதாரித்திரம் வேண்டுமோ? சற்று சிந்தனே செய்மின்.

(ஓம் தத் ஸத்)

C. நாருயணஸ்வாமிய்யர்.

பிரச்னேத்தரங்கள்.

நல்லொழுக்கத்தை விருத்திபண்ணிக்கொள்ளல்.

I. (பி) நல்லொழுக்கத்தை விருத்தி பண்ணிக்கொள்ள முக்கியமாய் ஒருவன் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டிய விஷயங்கள் என்ன?

(உ) நீதிசாஸ்திரத்தின் கருத்து மனிதன் தன்னுடையவும் தன்னைச்சுற்றிலுமுள்ளவர்கள் விஷயத்திலும் நடந்துகொள்ள வேண்டியவழி அதாவது நடத்தை இன்னதென்று வெளிப்படுத்துவதேயாம். (2) தவிரவும் நல்லொழுக்கத்தை விருத்திசெய்து கொள்வதால் மனிதனுக்கும் அவனுக்கு சமீபத்திலாவது, தூரத்திலாவது உள்ள ஜனக்களுக்கும் அன்னியோந்நிய நிலைமையை ஏற்படுத்திக்கொண்டு அதன்வழியாய் பரஸ்பரம் ஆனந்தத்தை அனுபவிக்கவேண்டுமென்பதே. இப்பொழுது பிரஸ்தாபிக்கப் பட்ட ஆனந்தமானது விஷயாதிகள் மூலமாய் இந்திரியங்கள் கிரகித்து அதனுல் ஏற்படும் நசுவரமான ஆநந்தத்தைப் பிரஸ்தாபித்ததல்ல. ஆனுல் தனது ஆத்மதிருப்தியிலேயே ஜனிக்கும் ஸ்திரமான ஆனந்தத்தை குறிப்பிடுகிறது.

ஸகலப் பிராணிகளுடைய உயிரெல்லாம் ஈசுவரனுடைய உயிரென்றும், ஸ்கலபிராணிகளுடைய அறிவும் ஈசுவரனுடைய அறிவென்றும் நிச்சயமாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

II. (பி) எல்லாம் ஈச்வரசைதன்னியம் என்பதற்கு ஓர் உதாரணத்தால் விளக்கக்கோறுகிறேன்.

(உ) அநேகம் பானைகளை ஓர் குளத்தில் ஜலம் மொண்டுவரக்கொண்டுபோவோமேயானுல் பானைகள்வெவ்வேருயிருந்தாலும் அவைகளுக்குள் பிரவேசிக்கும் ஜலம் ஒன்றுதானே. அதுபோலவே: அநேகம் உபாதிகள் ஜீவஸமுத்திரத்திலிருந்து தங்களால் கிரகிக்கக்கூடிய அளவு சைதன்னியத்தை கிரகிக்கிறது.

III. (பி) நீதிசாஸ்திரத்தின் பரமதாத்பர்யம் என்ன?

(உ) ஸகலவஸ்துக்களிடத்தும் அந்தர்யாமியாய் வசிக்கும் சைதன்னியம் ஒன்றென்றும் வேறு அல்லவென்றும் உணரும்படி செய்வதே நீதிசாஸ்திரத்தின் முக்கிய கருத்து.

IV. (பி) நாம் பிரவர்த்திகளை எவ்வாறுசெய்யவேண்டும்?

(உ) ஈசுவரன் கருணாநிதியாகையால் ஸகலப் பிராணிகளு டைய க்ஷேமத்தையும் எப்பொழுதும் விரும்புகிறார். அவரு டைய நோக்கத்திற்கு ஒத்து வேலை செய்வது நல்லதென்றும் அத ற்கு விரோதமாய்ச் செய்ய முயல்வது பிசகென்றும் ஏற்படும்.

V. (பி) எந்த ஆதாரத்தைக்கொண்டு நாம் நமது பிரவர் திகளை அவ்வாறு செய்யவேண்டும்?

(உ) வர்ணாசிரம தர்மங்களைப் போதிக்கிற சாஸ்திரங்கள் இவ்விதம் செய்தால் நல்லதென்றும், இவ்விதம் செய்தால் கெடு தலென்றும், தெளிவாய்த் தெரிவிக்கின்றன.

சமாசாரக்குறிப்புகள்.

நாகப்பட்டணம் தேவஸ்தானம் கமிட்டி மெம்பராயிருந்து இறந்துபோன P ரத்தினஸபாபதிபிள்ளை யவர்களின் காலிஸ்தா னத்திற்கு அநேகம் மிராசுதார்களும், வக்கீல்களும் தங்களுக்கு ஆகவேண்டுமென்று தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் ஜட்ஜி முன்பாக வி ண்ணப்பஞ்செய்துகொண்டார்கள். கடைசியில் வலிவலம் மணி த்துணை நாகதேசிகரவர்கள் அந்தக்காலிஸ்தானத்திற்கு நியமி க்கப்பட்டார்கள். இதில் முக்கியமாய் சிலவிஷயங்கள் வியசனி க்கத்தக்கது. அதாவது, (1) இப்பேர்ப்பட்ட ஸ்தானங்கள் காலி யாகுங்காலத்தில் அந்தக்காலிஸ்தானத்திற்கு மெம்பரை ஜனங் கள் (Election) எலக்ஷன் மூலமாய் தெரிந்தெடுக்க பாத்திய முண்டு. (2) கமிட்டி மெம்பர்கள் ஒன்றுசேர்ந்து காலிஸ்தான த்திற்கு மெம்பரை பொறுக்கி எடுக்கலாம். இப்படி இரண்டுபா த்தியத்தையும் இழந்து டிஸ்டிரிக்ட் ஜட்ஜி நியமிக்கும் நிலைமை வரையில் வைத்துக்கொண்டது தேவஸ்தானம் மெம்பர்களின் பெரிய அசிரத்தையையும், தூக்கத்தையும் அன்னியோன்னியக் குறைவயும் தெளிவாய்க்காட்டுகிறது. இதுரொம்பவும் இகழத் தக்கது.

*
* *

ஆதியார் பிர்ம்மஞ்ஞான சங்கத்தின் வைஸ்பிரசிடெண்டாக விருந்த A. P. சின்னட் என்பவர் அந்தஸ்தானத்தைக் காலிசெ

ய்தவுடன் ஜஸ்டிஸ் மகா-ா-ா-ஸ்ரீ சுப்பிரமணிய அய்யரவர்கள் அந்தஸ்தானத்திற்குப் பொறுக்கி யெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் தேகஅசௌகரியத்தால் பூராபென்ஷன் காலத்திற்கு 4 மாதம் முந்தியே வருஷம் ஒன்றுக்கு 400 £ நஷ்டத்துடன பென்ஷன் வாங்கிக்கொண்டுவிட்டார்கள். அவர்கள் சென்ற 12 வருஷகாலமாய் ஜட்ஜிவேலை பார்த்துவந்ததில் வெகுகம்பீரமாயும், மனஸாக்ஷிக்கு விரோதமன்றியிலும் பார்த்து வந்ததுபற்றி கவர்ண்மெண்டார் ரொம்பநல்ல அபிப்பிராயம்கொடுத்திருக்கிறார்கள். சென்னை ஐகோர்ட்டிலுள்ள மற்ற ஜட்ஜிகளும் பின்னுமநேக கனவான்களும் சேர்ந்து அய்யரவர்களின் ஞாபகச்சின்னமாய் தக்கஏற்பாடுசெய்ய முயற்சித்துவருகிறார்த்ள், அய்யரவர்கள் திருடகாத்திரத்துடன் வெகுநாள்ஜீவித்து உலகத்திற்கு நன்மை செய்யப்பிராத்திக்கிரோம்.

***

மாது ஸ்ரீ அனிபெஸண்டு அம்மாள் காசியில் யோக சூத்திரத்தைப்பற்றி நான்கு உபந்நியாசங்கள் டிசம்பர்மாதம் 27-ந்தேதி முதல் 30தேதிவரையில் செய்கிறார்கள். விபரங்கள் பிந்திவரும். திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கஸ்வாமிக்கு தைப்பூச மகோத்ஸவமானது பிலவங்க வருஷம் மார்கழி மாதம் 17ந்தேதி ஆரம்பம்.

25ந் தேதி குருவாரம்—வெள்ளிசூரிய சந்திரவாகனம்.
27ந் தேதி ஸ்திரவாரம்—வெள்ளியானைவாகனம்ஸிம்மவாகனம்
28ந் தேதி ஆதித்தவாரம்—விருஷபவாகனக்காக்ஷி.

தைமாதம் 2ந் தேதி புதவாரம் உதயாதி 12 நாழிகைக்குமேல் $14\frac{1}{4}$ நாழிகைச்குள்ளாக மீனலக்கினத்தில் மஹா ரதாரோகணம்.

தைமாதம் 6ந் தேதி ஆதித்தவாரம்—புஷயதீர்த்தம் கொடுத்தருளுதல்; அன்றிரவு வெள்ளிரதக்காக்ஷி. மேற்படி உத்ஸவமானது திருவாடுதுரை ஆதீனம் கனம் ஸ்ரீலஸ்ரீ. அம்பலவாண தேசிக பண்டார சன்னதியாரவர்களால் வெகு விமர்சையாய் நடத்தப்பட்டு வந்தது.

***

மகா-ா-ஸ்ரீ டி. எஸ். லக்ஷ்மிநாராயண அய்யரவர்கள் நவம்பர் மாதத்தில் வலிவலம், வாளக்கரை, செம்பியமகாதேவி, பாலக்குறிச்சி, மாதானம், முதலிய அநேக விடங்களில் பிர்ம்மஞ்

ஞான சங்கம் ஸ்தாபித்திருக்கிறார்கள். இவைகளை ஸ்தாபித்த விஷயத்தில் ஏனங்குடி மகா-ா-ஸ்ரீ இராமச்சந்திர நாயக்கரவர்கள் ரொம்பமுயற்சி.

***

சிருங்கேரி மடத்து ஸ்ரீ மத்சங்கராசாரியாரவர்கள் திருவானைக்காவல் கும்பாபிஷேகத்திற்கு வருவதாயிருப்பதால் தஞ்சை ஜில்லாவாசிகள் இந்த நல்ல சமையத்தை இழக்காமல் நமது ஜில்லாவிற்கு வரவழைப்பது வெகுநலம்.

***

நமக்குக்கிடைத்த (ஜோகான்ஸ்பர்க்,) (Johannesburg) இந்தியன் அபிப்பிராயம் (Indian opinion) என்ற நவம்பர் மாதம் 23ந்தேதி யுள்ளபத்திரி கையில் இந்தியக்கோவில்களுக்கு பூஜை செய்து வந்த ராமசுந்தர்பண்டிட் என்ற ஓர் இந்திய கனவானை அந்தத்தேசத்தை விட்டுப்போகும்படிக்கு ராஜாங்கத்தார் உத்திரவு செய்ததற்கு அவர்தான் கோவில் குருக்களானதால் போவதற்கு சௌகரியமில்லையென்று சொன்னதின்பேரில் ஒரு மாதம் தண்டித்திருக்கிறார்கள். நமது இந்தியாதேசத்தை விட்டு வெகுதூரம் போய் பிழைக்கச்சென்ற பின்னும் ஏராளமான இந்தியர்கள் படும் கஷ்டத்தையும் அப்பத்திரிகையில் கண்டிருக்கிறது. இது இந்தியர்களைப் பிடித்ததுர் பாக்கியமே.

***

நமக்கு பிர்ம்மவாதீன் (Brahmavadin) என்ற மாதாந்தர அங்கிலேய பத்திரிகை கிடைத்து வருகிறது. அதில் ஸ்ரீ-இராம கிருஷ்ண பரமஹம்ஸர், ஸ்மாமி விவேகாநந்தர், முதலியவர்களுடைய திவ்விய உபந்நியாசங்களும் ஸ்ரீ-ராமானுஜாசார்யார் அவர்களின் பாஷ்யங்களடங்கிய பகவத்கீதையும் பின்னுமநேக நல்ல விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. வருடசந்தா ரூ 4 தான். வேண்டியவர்கள் அந்த ஆபீஸிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

***

(Honorary Patrons) மகா-ா-ா T. N. ராமச்சந்திர அய்யரவர்கள், டிரஷரி டிப்டி கலெக்டர், தஞ்சாவூர். (2) U. S. ராமஸாமி அய்யரவர்கள், எக்ஸிகியூடிவ் இஞ்சினீர், செங்கற்பட்டு. (4) C. N. சுப்பிரமணிய அய்யரவர்கள், (பென்ஷன்) அஸிஸ்டெண்டு இனிஸ்பெக்டர், (of Schools,) மதுரை. (4) P. நாராயண அய்யரவர்கள், B.A., B.L., ஹைகோர்ட்டுவக்கீல், மதுரை. (5) B. S. நடராஜ சாஸ்திரியாவர்கள், B.A., B.L., ஹைகோர்ட் வக்கீல், நாகப்பட்டணம்.

(ஆதரணைக் கர்த்தாக்கள்.) — V. ராமச்சந்திர நாயுடு அவர்கள், ஏனங்குடி. (2) S. சீனிவாஸநாயுடு அவர்கள், ஏனங்குடி. (3) T. S. சிங்காரவேலு உடையாரவர்கள், தண்ணீர்க்குன்னம். (4) ஸ்ரீலஸ்ரீ, அம்பலவாணதேசிகபண்டார ஸன்னதியவர்கள், திருவாடுதுறை ஆதீனம். (5) ஸாம்பசிவ அய்யரவர்கள், குன்னியூர். (6) அஜபாநடேசுவர பண்டார ஸன்னதியார் அவர்கள். திருப்புகலூர். (7) வைத்திநாதஸ்வாமி அய்யரவர்கள், ஓனகப்பேரையூர்.

சந்தாதாரருக்கோர்விண்ணப்பம்.

சென்ற 15 மாதகாலமாய் அநேகர்கள் பத்திரிகைகளைப் பெற்றுக்கொண்டு வி. பி. அனுப்பப்பட்டவுடன் மௌனம் ஸாதித்து விட்டார்கள். அதனால் வெகு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இனி அவ்விதம் ஏற்படாமல் யிருக்கவேண்டிய தன்பொருட்டு ஸகல சந்தாதாரர்களுக்கும் பிப்பிரவரி மார்ச்சு மாதத்து இஷ்யூவை வி. பி. யில் அனுப்புவதாய் உத்தேசித்திருக்கிறது. அதைப்பெற்றுக்கொண்டு பத்திரிகையை ஆதரிக்கக்கோறுகிறோம். அல்லது பணத்தைசீக்கிரத்தில் அனுப்ப உதவிசெய்யக்கோறுகிறோம்.

தவிரவும், டிசம்பர்மாதம் 2-ந்தேதிமுதல் 2 மாதம் வரையில் பத்திராதிபர் ஏ. ராமய்யரவர்கள் கடுமையான ஜொரம், தலைவலியால் பீடிக்கப்பட்டு கடைசியில் ஈசுவரானுக்கிரகத்தால் உடம்பு ஸ்திதி சௌகரியமாயிற்று. ஆகைபால் தாமதத்திற்கு மன்னித்து இந்த பத்திரிகையின் அபிவிர்த்தியைக் கோரப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் சினேகிதர்களுக்கும் மற்றுமுள்ளவர்களுக்கும் தெரிவித்து பத்திரிகையை ஆதரிக்கும்படி செய்விக்கக்கோருகிறோம்.

(பத்திராதிபர்.)

ஏஜண்டுகள் தேவை.!

நமது பத்திரிகைக்கு சந்தாதாரர்கள் சேர்க்கவும் பணம் வசூலிக்கவும் ஏஜண்டுகள் தேவை! தக்க கமிஷன் கொடுக்கப்படும். தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, சென்னை முதலிய விடங்களில் ஏஜண்டுகளாயிருக்க விரும்புவோர்கள் விபரங்களுக்கு உடனே நேரில் எழுதித் தெரிந்துகொள்ள்லாம். (ப-ர்.)

The ".Brahmavadin."

A high class Mouthly, devoted to Religion and Philosophy, conducted in English by able Editors, started under the advice and patronage of Swami Vivekananda. It deals with the spirit of Hinduism in all its aspects. It takes a sympathetic view of all the religions of the world. It views and harmonises everything in the light of the Vedanta, advocates oneness in the seemingly conflicting many.

Highly spoken of by eminent Scholars both East & West.

RATES OF SUBSCRIPTIONS.

Annual Subscription *including postage*	India ...	... 4 Rs.
	United Kingdom	... 8 Sh.
	United States	... 2 Dol

Single No. 6 as or 6 *d*

Specimen copy free for half anna stamp.

The Brahmavadin Series.

WORKS BY

Swami Vivekananda.

	Rs. a. p.
Jnana Yoga (in the press) ...	2 8 0
Karma Yoga ...	1 0 0
Raja Yoga	1 8 0
Bhakti Yoga (in the press ...	1 0 0
From Colombo to Almora ...	2 8 0
Ideal of Universal Religion ...	0 2 6
Real and Apparent Man ...	0 2 6
Reply to the Madras Address ...	0 1 6
Atmam (self) ..	0 2 0
Vedanta Philosophy.	0 6 0

Others.

	Rs a. p
Prophet of Dakshinaswar	0 8 0
Sayings of Sri Ramakrishna Paramahamsa	1 0 0
Pastoral Sri Krishna.	0 4 0
Sri Krishna the King-maker ...	0 4 0
Lectures, Literary and Religious ...	0 8 0
Vedanta: Its Theory and practice ..	0 1 0
Duessen's Vedanta Philosophy ...	0 2 0
Theism by Justice Rauade ...	0 6 0
Indian Loyalty by Prof. M. Rangacharya	0 4 0

Full catalogue for half anna Stamp.

THE ".BRAHMAVADIN" OFFICE,
Georgetown MADRAS.

பிர்ம்மஞ்ஞானப்பத்திரிகை.

1. 1906-ஹு ஜூலை மீ முதல் திருவாரூரில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது இதில் ஹிந்துமததத்துவங்கள், பகவத்கீதைக்கு நூதனதமிழ் மொழிபெயர்ப்புகள். மஹான்களின் சரித்திரங்கள், அத்வைதம், துவைதம், விஸிஷ்டாத்வைதம், தியாஸபி, விவேகாநந்தரின் உபந்நியாசங்கள், முதலிய விஷயங்கள் அடங்கியிருக்கும் தவிர ,மடங்கள், ஆலயங்கள், தரும சத்திரங்கள் பரிபாலனம் செய்யப் பட்டு வரும் நேர்மை, சீர்குலைவு முதலியவைகளைப் பற்றிய ஸமாச்சாரக் குறிப்புகளும் பின்னும் மதசம்பந்தமான சமாச்சாரங்களும் அடங்கியிருக்கும்.

2. சாமான்ய ஏழைகள்கூட சுலபமாய் வாங்கி வாசித்துப் பயனெய்துமாறு இந்தியாவிற்கு வெகு சொற்பமாகிய வருடச் சந்தா ரூ 1—8-ம் சிங்கப்பூர், மோல்மீன். பினாங்கு முதலிய விடங்களுக்கு ரூ 2—8 மாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஹெட்மாஸ்டர் மூலமாய் விண்ணப்பம் செய்துக்கொள்ளும் மாணாக்கர்களுக்கு மாத்திரம் ரூ 1 க்குக் கொடுக்கப்படும். சந்தா அட்வான்ஸாகவே செலுத்தப்படவேண்டும். அப்படி செலுத்துபவர்களுக்கு வருடத்திற்கு ஒரு படம் இனாமாயளிக்கப்படும். வருடக் கடைசியில் செலுத்தப் பிரியமுள்ளவர்களுக்கு வருட சந்தா ரூ 2 வீதம் சார்ஜ் செய்யப்படும். சந்தாதார்களாயிருக்க விரும்புவோர்கள் வருஷத் துவக்கமாகிய ஜூலையிலிருந்தாவது அல்லது ஜனவரியிலிருந்தாவது பத்திரிகை பெற்றுககொள்ளவேண்டும். வேறுவிதமாய்ப் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. தனிக்காப்பி கிரயம் அணா 4.

உபந்நியாசங்கள் முதலிவைகள் தெளிவாயும் நேர்த்தியாயும் பிரதி மீ 20 வுக்குள் கிடைத்தாலன்றி அடுத்த மீத்தில் பிரசுரஞ் செய்யப்படமாட்டாது. நெருக்கமாயுந் தெளிவாயுமிராத உபந்நியாசங்கள் பிரசுரஞ் செய்யப்படமாட்டாது. வாபீசுசெய்யப்படவுமாட்டாது. இதில் கையெழுத்துப்போடப்பட்டிருக்கும் உபந்நியாசம் முதலியவைகளுக்குப் பத்திராதிபர் ஜவாப்தாரியல்ல. பத்திரிகை கிடைக்காதவர்கள் ஒரு மாதத்திற்குள் தெரிவித்துக் கொண்டாலொழிய பத்திரிகை மறுபடியுமனுப்பப்படமாட்டாது. அவசியம் வேண்டியதாயிருந்து கைவசமுமிருந்தால் காப்பி 4 அணா வீதம் பெற்றுக்கொண்டு கொடுக்கப்படும். பதில் வேண்டியவர்கள் ரிப்ளை கார்டு அல்லது லேபிள் அனுப்பினால் பதில் அனுப்பப்படும்.

Advertisements for moderate charges.

பிரசுரங்கள் மிதமான சார்ஜுக்குப் போடப்படும்.

சந்தாதார்கள் தங்கள் சந்தாவை விரைவில் அனுப்பவேண்டும். அல்லது மௌனம் சாதிக்காமல் வி, பி. யைப்பெற்றுக் கொள்ளவேண்டும்.

நல்ல ஏஜண்டுகள்! தாராளமான கமிஷன்கொடுக்கப்படும். Apply to,

ஏ. இராமய்யர்,
எடிட்டர் & புரொப்ரைட்டர்,
பிரம்மஞ்ஞான பத்திரிகை, திருவாரூர்.